# உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண் 210/2015

பெயர். ராஜி நாள். 21.06.2022

வா.சா.2ன் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

கோவில் இடம் எந்த சர்வே நெம்பரில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. கோவில் ஒரே ஒரு சர்வே நெம்பரில் உள்ளதா அல்லது 2 சர்வே எண்ணில் உள்ளதா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த கோவிலில் நானும் ஒரு பாகதாரர் ஆவேன். வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார்கள் சகோதரர்களா என்றால், இல்லை. பங்காளிகள் முறை ஆகும். 1ம் பிரதிவாதியின் அப்பாவும் கோவிலுக்கு வரி கட்டி பங்குதாரராக இருந்து வந்தார். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்த பிறகு 1ம் பிரதிவாதி வரி எதுவும் கொடுக்கவில்லை. கோவில் விழாக்களிலும் கலந்து கொள்வதில்லை. அவருடைய தகப்பனார் உயிருடன் இருக்கும்போது கோவிலுக்கு சென்று வருவார்கள். வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் பங்காளி முறை ஆவார்கள். பிரதிவாதிகள் எதற்கு கோவில் பாதையை தடுக்கிறார்கள் என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால், அந்த இடம் எங்களுக்கு சொந்தமானது என்று 1, 3 வருடங்களுக்கு முன்பு கேட் அமைத்து விட்டார்கள். 1ம் பிரதிவாதி கோவில் பாதையை தடுத்ததற்காக புகார் ஏதேனும் காவல் துறையினரிடம் அளித்து அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. பங்காளிகளாகிய நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் அருள்குமாரை கோவில் தர்மகர்த்தாவாக தேர்ந்தெடுத்து உள்ளோம். 1ம் பிரதிவாதியும் அதில் ஒரு நபராக என்றால், இல்லை. அருள்குமார் கோவில் தர்மகர்த்தாவாக அனைவராலும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றாலும், அவரது தகப்பனார் தர்மகர்த்ததாக இருந்ததை பயன்படுத்தி அவராகவே தர்மகர்த்ததாக செய்து கொண்டார் என்றாலும், வாதி பங்காளி உறவுமுறை என்பதால் நான் மேற்கூறிய விபரங்கள் மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதி பெண் என்பதால் அவருடைய வழிபாட்டு உரிமையை நாங்கள்தான் தடுத்து வருகிறோம் என்றால், சரியல்ல. நான் கோவில் நிர்வாகத்தில் எந்த பொறுப்பிலும்

இல்லை. கோவில் இரண்டு சர்வே எண்களில் உள்ளது என்றாலும், 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தை நாங்கள்தான் தடுத்து வருகிறோம் என்றாலும், சரியல்ல. வாதிக்கு நான் உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல,

ஒப்பம் / ராஜி

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.